தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறையின்
பூம்புகார் கல்லூரி (தன்னாட்சி)
மேலையூர் – 609 107
*****

**தேர்வு நெறியாளர் அலுவலகம்** **நாள்: 08.01.2021**

# நவம்பர் 2020 இணைய வழித் தேர்வுகள் (Covid-19) – மாணவர்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகள்

1. **நவம்பர் 2020** எழுத்துத்தேர்வுகள் **(External Exams)** நடப்பு **மற்றும் ஏற்கனவே கல்லூரி** படிப்பு **முடித்து நிலுவைத்தாள்கள் வைத்துள்ள** அனைத்து மாணவ/மாணவியர்களுக்கு **18.01.2021** முதல் **தொடங்கி** நடத்தப்படவுள்ளது.
2. **இளநிலை** தேர்வுகள் பருவம் **முதல், மூன்று மற்றும் ஐந்து** ஆகியவற்றிற்கு மட்டும் தேர்வுகள் நடைபெறும்.
3. **முதுநிலை** தேர்வுகள் பருவம் **முதல் மற்றும் மூன்று** ஆகியவற்றிற்கு மட்டும் தேர்வுகள் நடைபெறும்.
4. **தேர்வுக்கால அட்டவணை கல்லூரி இணையதளத்தில்** வெளியிடப்படும்.
5. இணைய வழியில் மட்டும் **(Online)** தேர்வுகள் நடைபெறும். வினாத்தாளில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின்படி தேர்வுக்காலம் **மூன்று மணி நேரம்** ஆகும் **(75 மதிப்பெண்கள்)**
6. நாள்தோறும் தேர்வுகள் காலை **9.30 மணி முதல் மதியம் 12.30 மணி** வரை நடத்தப்பெறும். மதியத்தேர்வுகள் பிற்பகல் **1.30 மணி முதல் 4.30** மணி வரை நடைபெறும்.
7. தேர்வு துவங்குவதற்கு **15 நிமிடத்திற்கு** முன்னதாக பூம்புகார் கல்லூரி **இணையத் தளத்திலிருந்தும் (www.poompuharcollege.org) வாட்ஸ்அப் குழு (whatsapp Group)** மூலமாகவும் **வினாத்தாள்கள்** வெளியிடப்படும்.
8. மாணவர்கள் வினாத்தாள்களை பதிவிறக்கம் செய்தவுடன் பொறுப்பு ஆசிரியர்களுக்கு உடன் தெரிவிக்க வேண்டும். (whatsapp/ mail/ மூலமாக Reg. No.><QPR). **(Example 17U06002 QPR)**
9. மாணவர்கள் விடை எழுதுவதற்கு **A4 தாள்களை (A4 Sheet)** மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
10. விடைத்தாளின் முகப்பு பக்கத்தில் **பதிவு எண், பெயர், வகுப்பு,** பாடக்குறியீடு **எண்,** பாடத்தின் **பெயர், கையொப்பம், தேர்வு நாள்** மற்றும் **மொத்த பக்கங்களின் எண்ணிக்கை (Register No. Name, Class, Subject Code, Title of the Paper, Signature, Date of Examination & Total Number of Pages)** ஆகியவற்றை குறிப்பிட வேண்டும் **(Annexure - I)**
11. A4 தாள்களில் (A4 sheet) **இரண்டு பக்கத்திலும் (Front and Back)** விடைகளை எழுதலாம்.
12. விடைத் தாள்களில் **நீலம் அல்லது கருப்பு நிற பேனாக்களால் மட்டும் (ball point pen)** மாணவர்கள் எழுத வேண்டும்.

**(த.பி.பா)**

13. மாணவர்கள் விடைத்தாள்களில் அனைத்து பக்கங்களில் பக்க எண், பதிவு எண், பாடக்குறியீட்டு எண் **(Page No, Register No, Subject Code)** விடைத்தாளில் மேல் பக்கத்தில் எழுதிட வேண்டும் **(Annexure - II)**

14. விடைத்தாளின் முதல் பக்கத்தில் எழுதப்பட்ட **மொத்த பக்க எண்ணிக்கையினை** கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

15. விடைகளை தட்டச்சு செய்து அனுப்புவது, புத்தகங்களில் பார்த்து எழுதுவது, Google image பயன்படுத்துவது விடைகளை ஒட்டி அனுப்புவது **போன்ற செயல்களுக்கு அனுமதியில்லை.**

16. ஒவ்வொரு நாளும் தேர்வு முடிந்தவுடன் அடுத்த பதினைந்து நிமிடங்களில் விடைத்தாள்களை **PDF ஆக மாற்றி வாட்ஸ்அப்/மெயில் மூலமாக** தங்களின் **பொறுப்பாசிரியர்களுக்கு தனிப்பட்ட முறையில்** உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும். **எக்காரணம் கொண்டும் குழுவில் பகிர்தல் கூடாது.** குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அனுப்பப்படாத மாணவர்களின் விடைத்தாட்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

17. ஒவ்வொரு நாளும் தேர்வு முடிந்தவுடன் விடைத் தாள்களை அன்றே **Speed post/Register Post/Courier** மூலம் ஒப்புதல் இணைப்புடன் **தேர்வு நெறியாளர், பூம்புகார் கல்லூரி (தன்னாட்சி) மேலையூர் – 609 107** என்ற முகவரிக்கு உள்ளுறையிட்ட A4 அளவிலான கவரில் அனுப்பி வைக்க வேண்டும் அல்லது வசதி இல்லாத மாணவர்கள் அன்றைய தினமே நேரடியாக பூம்புகார் கல்லூரியில் **மாலை 5.00 மணிக்குள்** ஒப்படைக்கலாம்.

18. விடைத்தாள்களை அதற்கென வரையறுக்கப்பட்ட வடிவில் அனுப்பவும் **(Annexure - III).**

19. மாணவர்கள் தங்களின் **வீட்டில்** இருந்தப்படியே தேர்வுகள் எழுத வேண்டும். எக்காரணம் கொண்டும் **வெளியிடங்களில்** அமர்ந்து தேர்வு எழுதக் கூடாது.

20. தேர்வுகள் தொடர்பான **எத்தகைய முறைகேடுகளிலும்** மாணவர்கள் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள். பின்னர் முறைகேட்டில் ஈடுபட்டதாக தெரியப்பட்டால் மாணவர்கள் கல்லூரியின் தற்போதைய விதிமுறைகளின்படி **உரிய நடவடிக்கைக்கு உள்ளாவார்கள்.**

21. விடைத்தாள்களை திருத்தும் போது தங்களிடமிருந்து பெறப்பட்ட **PDF** ஐ ஒப்பிட்டு பார்க்கப்படும். மாற்றங்கள் ஏதேனும் இருப்பின் **எக்காரணம் கொண்டும் விடைத்தாள் திருத்தப்பட மாட்டாது.**

**தேர்வு நெறியாளர்/முதல்வர்**
Poompuhar College (Autonomous)
MELAIYUR-609 107

**நகல் :-**

1. முதன்மை தேர்வு மற்றும் கூடுதல் தேர்வு கண்காணிப்பாளர்கள்
2. அனைத்துத் துறைத் தலைவர்கள்
3. கல்லூரி அலுவலகம் (இரு படிகளில்)
4. அறிவிப்புப் பலகை
5. ஆசிரியர்கள் **(college whatsapp group)**
6. கல்லூரி இணையத் தளம்

**POOMPUHAR COLLEGE (AUTONOMOUS)**
**NOVEMBER – 2020 ONLINE EXAMINATIONS**

| | | | |
|---|---|---|---|
| **REGISTER NO** | : | **SUB.CODE** | : |
| **NAME** | : | **TITLE OF THE PAPER** | : |
| **CLASS** | : | **DATE** | : |
| **SIGNATURE** | : | **TOTAL NO.OF PAGES** | : |

---

# FIRST PAGE- MODEL

CONTROLLER OF EXAMINATIONS
POOMPUHAR COLLEGE

REGISTER NO: SUB.CODE : PAGE NO :

---

ADDITIONAL PAGE- MODEL

CONTROLLER OF EXAMINATI...
POOMPUHAR C...

SIGNATURE

CONTROLLER OF EXAMINATIONS
POOMPUHAR

# ONLINE EXAMINATIONS – ANSWER SCRIPT - COVER

| DATE | SUB.CODE | REGISTER NO |
|---|---|---|
| | | |

FROM

TO

THE CONTROLLER OF EXAMINATIONS

POOMPUHAR COLLEGE (AUTONOMOUS)

MELAIYUR (PO)

SIRKALI (TK)

MAYILADITURAI (DT)

TAMILNADU – 609 107.

CONFIDENTIAL